
# திருட்டு நகை(ECI)யும்...சேட்டு கடை(BJP)யும்!

**பேரா.கான்ஸ்டன்டைன் ரவிந்திரன்**
கழக செய்தித் தொடர்புச் செயலாளர்,
ஆசிரியர், The Rising Sun.



**"The People who cast their votes, don't decide an election…**
**The People who count the votes do…"**
**-Joseph Stalin**

"ஒரு தேர்தலின் முடிவை வாக்களிக்கும் வாக்காளர்கள் முடிவு செய்வதில்லை... மாறாக, வாக்குகளை எண்ணுபவர்களே...."

என்ற முன்னாள் ரஷ்ய அதிபர் ஜோசஃப் ஸ்டாலின் அவர்களின் கூற்றை மெய்ப்பிக்கும் பொருட்டு இந்திய தேர்தல் ஆணையத்தின் சமீபத்திய தில்லு முல்லுகள் மெல்ல, மெல்ல அம்பலமாகி தெள்ளத் தெளிவாக உறுதி படுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது.

கடந்த 27/08/2025 அன்று தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பீகார் மாநிலத்தில் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் முன்னிலையில் நடைபெற்ற வாக்கு அதிகார பேரணியில் பங்கேற்ற போது ஒன்றிய பாஜக அரசும் இந்திய தேர்தல் ஆணையமும் கூட்டுச்சதியில் ஈடுபட்டு மக்கள் தீர்ப்பை மாற்றி தங்கள் வெற்றியை உறுதி செய்து ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்குவதை கண்டித்ததோடு 1975 ஜனநாயகத்தை மீட்டெடுக்க பாடுபட்ட தலைவர் JP என்கிற ஜெயப்பிரகாஷ் நாராயணன் மற்றும் லாலு பிரசாத் போன்ற தலைவர்களின் பாதையில் நாம் தொடர்ந்து போராட வேண்டும் பீகாரில் நாம் பெறும் வெற்றிதான் இந்தியாவைக் காப்பாற்றும் எதிர்கால வெற்றிக்கு கட்டியம் கூறும் என்று அம்மாநில மக்களுக்கு நம்பிக்கையும் உற்சாகமும் தரும் விதமாக உரையாற்றினார்..ஒரு பேரணியில் பங்கேற்க இங்கிருந்து ஒரு முதல்வர் பீகார் போக வேண்டுமா என்று சில அதிமேதாவிகள் கேட்கிறார்கள்.. வோட்டு திருட்டு என்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை புரிந்து கொள்ள அதன் பல பரிமாணங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சுதந்திர இந்தியாவின் வளமான எதிர்காலத்திற்கு வழிகாட்டும் விதமாக அன்றைய தேசிய தலைவர்களும், சட்ட வல்லுனர்களும் ஒன்றிணைந்து மக்கள் பிரதிநிதித்துவ பாராளுமன்ற முறையை ஏற்றுக்கொண்டு, அந்த பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க, மக்கள் பங்கேற்கும் வாக்கு சீட்டு தேர்தல் முறையை தேர்ந்தெடுத்து, அந்த தேர்தலை செவ்வனே நடத்திடும் உன்னதமான நோக்கில், அரசியலமைப்பு சட்டத்தின் 324329 பிரிவுகளின்படி தேர்தல் ஆணையத்தை அமைத்தனர். தேர்தல் நடைமுறையை கண்டிப்புடன் செயல்படுத்தினாலன்றி, 'ஒரு மனிதன் ஒரு வாக்கு' என்ற தேர்தல் ஜனநாயக விழுமியத்தைக் கட்டிக்காக்க இயலாது.

சுதந்திர இந்தியாவின் வளமான எதிர்காலத்திற்கு வழிகாட்டும் விதமாக அன்றைய தேசிய தலைவர்களும், சட்ட வல்லுனர்களும் ஒன்றிணைந்து மக்கள் பிரதிநிதித்துவ பாராளுமன்ற முறையை ஏற்றுக்கொண்டு, அந்த பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க, மக்கள் பங்கேற்கும் வாக்கு சீட்டு தேர்தல் முறையை தேர்ந்தெடுத்து, அந்த தேர்தலை செவ்வனே நடத்திடும் உன்னதமான நோக்கில், அரசியலமைப்பு சட்டத்தின் 324329 பிரிவுகளின்படி தேர்தல் ஆணையத்தை அமைத்தனர். தேர்தல் நடைமுறையை கண்டிப்புடன் செயல்படுத்தினாலன்றி, 'ஒரு மனிதன் ஒரு வாக்கு' என்ற தேர்தல் ஜனநாயக விழுமியத்தைக் கட்டிக்காக்க இயலாது.

தேர்தல் ஆணையத்தின் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டதினாலேயே தேர்தல் ஆணையம் தவறு செய்தது என்ற முன்முடிவிற்கு வருவது நியாயமானது அல்ல. ஆனால், சீசரின் (ராமரின்) மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும் என்பதைப் போல, தேர்தல் ஆணையத்தின் செயல்முறையில் நேர்மை, வெளிப்படைத்தன்மை, வாக்காளர்களின் விருப்பம் எந்தவித இடையூறும் இன்றி, நியாயமாகவும் சுதந்திரமாகவும் பிரதிபலிக்கப் படுதல் போன்றவற்றை உறுதி செய்வதற்கு பதிலாக தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்கு உரியதாகவே இருக்கின்றன. குறிப்பாக, வாக்காளர் பட்டியலில்

1) போலி வாக்காளர்கள்,

2) பொய்யான மற்றும் இல்லாத முகவரி வாக்காளர்கள்,

3) ஒரே முகவரியில் நூற்றுக்கணக்கான வாக்காளர்கள்

4) 18 வயது நிரம்பிய முதல் முறை வாக்காளர்களுக்கான படிவம் 6ஐ தவறாக பயன்படுத்துதல்,

5) டிஜிட்டல் இந்தியாவில் மின்னணு வாக்காளர் பட்டியல் இல்லை என்பது

6) தேர்தல் நடைமுறைகளை பதிவு செய்த கேமரா பதிவுகளை தர மறுப்பது

7) படிவம் 17C வெளியிடாமை

8)தேர்தல் முடிந்த நாளில் தேர்தல் ஆணையம் அறிவித்த வாக்களித்தவர்களின் எண்ணிக்கைக்கும், வாக்கு எண்ணிக்கை நாளில் எண்ணப்பட்ட வாக்குகளுக்கும் அதிக அளவு வேறுபாடு (1 % முதல் 12 %).

9) கடந்த 2.3.2023 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் தேர்தல் ஆணையர்களை தேர்ந்தெடுப்பதற்கு பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இந்திய தலைமை நீதிபதி கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதற்கு மாறாக, இந்திய தலைமை நீதிபதியை தவிர்த்து அவருக்கு பதிலாக பிரதமர் பரிந்துரைக்கும் ஒன்றிய கேபினட் அமைச்சர், பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் என்ற குழு அமைக்க சட்டம் இயற்றி தேர்தல் ஆணையர்கள் தேர்தலையே ஒருதலைப் பட்சமாக்கியது போன்ற பல நடவடிக்கைகள் தேர்தல் ஆணையத்தின் மீதான சந்தேகத்தை வலுப்படுத்து கின்றன.

இதுவரைக்கும், பல நேரங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் நம்பகத் தன்மை கேள்விக்கு உட்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் முதல் முறையாக தேர்தல் முறைகேட்டில் தேர்தல் ஆணையமே ஈடுபட்டதாக காத்திரமான தரவுகளுடன் கடந்த 20.11.2024ல், மகாராஷ்டிரா மாநிலத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து குற்றச்சாட்டுகள் எழுந்தன. அப்போது தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக மூன்று அறிவிப்புகளை வெளியிட்டிருந்தது. மாலை 5:00 மணி நிலவரப்படி, 288 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குப்பதிவு அமைதியாக நடந்தேறியது. இதுவரையில் 58.22% அதாவது 5,64,88,024 பேர் வாக்களித்து இருக்கின்றனர். இன்னும் பல வாக்கு மையங்களில் வாக்குப்பதிவு தொடர்கிறது. இரவு 11:45க்கு இறுதி நிலவரம் தெரியவரும் என்பதைத் தொடர்ந்து இரவு 11:53க்கு வாக்குப் பதிவு நிறைவடைந்தது என்றும், 65.02% அதாவது 6,30,85,732 பேர் வாக்களித்துள்ளனர் என்று அறிவித்தது. இதன்படி, 65,97,708 பேர் மாலை 5:00 மணிக்கு மேல் வாக்களித்துள்ளனர். வாக்கு எண்ணும் நாளான 22.11.2024 எண்ணப்பட்டதாக அறிவிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 6,40,85 095 பேர். அதாவது 66.05% மொத்தத்தில், 9,99,363 வாக்குகள் அதிகரித்திருக்கிறது. இதிலிருந்து மாலை 5:00 மணிக்கு மேல் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை 75,97,071 ஆகும். மொத்தத்தில் 7.83% பேர் மாலை 5:00 மணிக்கு மேல் வாக்களித்து இருக்கிறார்கள்.

இதுவரைக்கும், மகாராஷ்டிரா மாநில தேர்தல் வரலாற்றில் நடக்காத அதிசயம் இது. இதை விட அதிர்ச்சி என்னவென்றால் மே 2024 நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான இந்திய கூட்டணி 31 நாடாளுமன்ற தொகுதிகளிலும், பாஜக தலைமையில் ஆன கூட்டணி 17 தொகுதிகளிலும் வென்றிருந்த நிலையில், அடுத்த ஐந்து மாதங்களில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் பாஜக கட்சி தலைமையில் ஆன கூட்டணி 238 சட்டமன்ற தொகுதிகளையும், காங்கிரஸ் தலைமையிலான இந்திய கூட்டணி 50 தொகுதிகளில் வெற்றி பெற்ற தலைகீழ் மாற்றம் நிகழ்ந்தது. செயற்கையாக அதிகரித்த வாக்குகள் எண்ணிக்கை பாஜக கூட்டணி வெற்றிக்கு வழிகோலியது என்பது தொகுதி வாரியான கணக்கீட்டின் மூலம் தெரிய வந்துள்ளது. இன்னொரு குறிப்பிடத்தக்க செய்தி சட்டமன்றத்தின் ஆயுட்காலம் ஆறு மாத காலத்திற்குள் முடிவடையும் நிலையில் இருப்பதால் பாராளுமன்ற தேர்தலுடனே ஒன்றாக நடத்தி இருக்கலாம் ஆனால் ஆளும் பாஜக கூட்டணி வெற்றிக்கு இசைவாக டிசம்பரில் நடத்தியது என்ற குற்றச்சாட்டையும் புறந்தள்ள முடியாது. இந்த முறைகேடுகளை கடந்த 2024 நாடாளுமன்ற தேர்தல் நடந்து முடிந்த உடனேயே பொருளாதார நிபுணரும், அரசியல் விமர்சக ர்மான பிரகலா பிரபாகர் அவர்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டியும் தேர்தல் நடைமுறைகளில் சீர்திருத்தங்களை வலியுறுத்தியும் பேசி வருகிறார்.

குறிப்பாக 14.8.2024 அன்று கொச்சியில் நடந்த கருத்தரங்கத்தில், Vote for Democracy மற்றும் Association for Democratic Reforms போன்ற நிறுவனங்களின் ஆய்வறிக்கை புள்ளி விவரங்களை கையில் வைத்துக்கொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையில் இருந்து எண்ணப்பட்டதாக அறிவிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை சற்றேறக் குறைய 5 கோடி வாக்குகள் அதிகரித்திருக்கின்றன. குறிப்பாக கேரளாவில் பாஜக வென்ற ஒரே தகுதியான திருச்சூர் நாடாளுமன்ற தொகுதியில் இந்த கூடுதலான வாக்கு எண்ணிக்கை 86,000 ஆகும். ஆனால், பாஜக உறுப்பினர் வென்ற வாக்கு வித்தியாசம் 75 ஆயிரம் ஆகும். அதோடு 1952 முதல் 2014 வரைக்கும் நடந்த தேர்தல்களில் இந்த வாக்கு வித்தியாசம் 1%திற்கு மேல் இருந்ததில்லை என்ற ஆதாரப்பூர்வ உண்மையையும் தெரிவித்து இருந்தார். இந்த 5 கோடி வாக்கு வித்தியாசத்தில் பெரும்பாலான வாக்குகளை ஏறத்தாழ 12% வரைக்கும் கூடுதலான வாக்குகள் பெற்ற 79 தொகுதிகளில் பாஜக கூட்டணி வென்றிருக்கிறது. இந்த 79 தொகுதிகளும் நாடாளுமன்ற தேர்தலுக்கான 7 கட்ட தேர்தலில் 2ம் கட்டமாக நடந்த மாநிலங்களில் வாக்களித்த வர்களின் இறுதி பட்டியல் இன்று வரை வெளியிடப் படவில்லை. ஆனால் வாக்கு எண்ணிக்கை முடிந்து தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட்டு இருந்தது. சரியாக சொல்வதாக இருந்தால், மக்களின் தீர்ப்பை மாற்றும் வகையில் மின்னணு வாக்கு இயந்திரம் மூலமாக வாக்குத்திருட்டை நடத்தி பாஜக அரசு வென்றிருக்கிறது.

'வேலியே பயிரை மேய்ந்த கதையாக', இந்திய ஜனநாயகத்தைக் கட்டிக் காக்க வேண்டிய தேர்தல் ஆணையமே, ஜனநாயக விரோத தேர்தல் முறைகேடுகள் குற்றச்சாட்டில் சிக்கித் தவிப்பது வருத்தத்திற்குரியது. ஜனநாயகத்தின் பாதுகாப்பை தேர்தல் நடைமுறைகள் வெளிப்படையாக, நேர்மையாகவும், நியாயமாகவும் நடைபெறுகிறது என்கிற நம்பிக்கையை ஒவ்வொரு வாக்காளருக்கும் ஏற்படுத்த வேண்டிய முக்கிய கடமையாகும். தேர்தல் ஆணையத்தின் மீதுகடந்தகாலங்களில்பலகுற்றச்சாட்டுகள் கூறப்பட்ட போதிலும் ஆணையத்தின் தன்னிலை விளக்கம் ஓரளவுக்கு நம்பிக்கை தருவதாக இருந்தது. ஆனால், 2024 நாடாளுமன்ற தேர்தல் மற்றும் அதனை தொடர்ந்து நடந்த பல தேர்தல்களிலும் தேர்தல் ஆணையத்தால் பல முறைகேடுகள் நடந்திருப்பது தேர்தல் ஆணையமே தந்த தரவுகளின் அடிப்படையில் பொது வெளியில் குற்றம் சாட்டப்பட்டிருப்பதும், அதற்குரிய பதிலைத் தராமல் பொறுப்பில்லாத மறுப்புரைகளை தேர்தல் ஆணையம் வெளியிடுவதும், குற்றம் நடந்திருக்கும் என்பதை உறுதிப்படுத்தும் விதமாக அமைந்திருக்கிறது.

நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவரான ராகுல் காந்தி அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு நடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களில் தேர்தல் ஆணையமும் பாஜகவும் கூட்டு சதியின் மூலம் வென்றிருப்பதாக குற்றம் சாட்டியதோடு கடந்த 7.8.25 அன்று, 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப் போன்று கர்நாடகாவின் மகாதேவபுரா சட்டமன்ற தொகுதியில், ஏறத்தாழ 1,00,250 வாக்காளர்கள் போலியானவர்கள் என்பதை தரவுகளுடன் வெளியிட்டார். போலியான வாக்காளர்கள் 11,965 பேர். இல்லாத அல்லது போலியான விலாசம் கொண்டோர் 40009 பேர். ஒரே முகவரியில் அதிக எண்ணிக்கையில் வசிப்பவர்கள் 10,452 பேர். புகைப்படம் இல்லாத வாக்காளர்கள் 4,132 பேர். இதோடு முதல் முறை (1823 வயது வரை) வாக்காளர்களுக்கான படிவம் 6 பயன்படுத்தி. 7095 வயது வரையிலானோர் என்ற புள்ளி விவரங்களை தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்காளர் பட்டியலை 6 மாத காலம் ஆய்விற்கு பின் வெளியிட்டார்.

உடனே தேர்தல் ஆணையம் என்ன செய்திருக்க வேண்டும்? ராகுல் காந்தி அவர்களின் கூற்றுகள் அனைத்தும் பொய் என்பதை ஆதாரத்துடன் நிரூபித்துக் காட்டி இருக்க வேண்டும்.

ஆனால் ஆணையமோ இந்த குற்றச்சாட்டு தொடர்பாக தேர்தல் விதி 1960 20(3)(ஆ) பிரிவுப்படி, தான் சொல்வது உண்மை என்று ராகுல் காந்தி நம்பினால், அவர் பிரமாணப் பத்திரம் ஒன்றில் கையெழுத்திட்டு புகார் அளிக்க வேண்டும், அல்லது அவர், இந்திய மக்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று தேர்தல் ஆணையம் கூறியது. இதில் வேடிக்கை என்னவென்றால் மேற்கூறிய இந்த சட்டப் பிரிவு தனி மனிதன் தனது தனிப்பட்ட பெயர் அல்லது முகவரி வாக்காளர் பட்டியலில் இல்லை என்றாலோ தவறாக இருந்தாலோ தாக்கல் செய்ய வேண்டிய பிரமாணப் பத்திரம். என்பது கூட தேர்தல் ஆணையர்களுக்கு தெரியாமல் இருப்பதுதான்.

இப்படி நாளுக்கு நாள் தேர்தல் ஆணையத்தின் மீது குற்றச்சாட்டுகள் அதிகரித்து வரும் சூழலில் வருகின்ற நவம்பரில் தேர்தல் நடைபெற உள்ள பிஹார் மாநிலத்தில் முற்றிலும் உண்மையான வாக்காளர் பட்டியல் தயாரிக்க போவதாக கூறிக்கொண்டு சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணிகளை (SIR) தேர்தல் ஆணையம் மேற்கொண்டு கடந்த 1ந்தேதி, வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டது. அதில், 7 கோடியே 24 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே இருந்தன. 65 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டு இருந்தன. அவர்களில், 22 லட்சத்து 34 ஆயிரம் பேர் இறந்து விட்டதாகவும், 36 லட்சத்து 28 ஆயிரம் பேர் நிரந்தரமாக இடம்பெயர்ந்து விட்டனர் அல்லது முகவரியில் காணவில்லை என்றும், 7 லட்சம் பேர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பெயர் சேர்த்து இருப்பதாலும் மேற்கண்ட 65 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதாகவும் தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்தது. இதிலே கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் என்னவென்றால் பீகார் மாநில அரசியலை தீர்மானிக்கக்கூடிய சீமாஞ்சல், அராரியா, கிஷன் கஞ்ச், பூர்னியா மற்றும் கதிஹார் ஆகிய நான்கு மாவட்டங்களில், மொத்தம் 7.6 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இந்த மாவட்டங்களில் முஸ்லிம் மக்கள் தொகை சதவீதம் 38% முதல் 68% வரை உள்ளது குறிப்பிடத்தக்கது. இன்னொரு பக்கத்தில் தனாரா கிராமம் போன்ற மிகவும் ஏழ்மையான மகாதலித் மக்கள் வசிக்கின்ற இடங்களில் பெரும்பாலானவர் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது இவர்கள் பெரும்பாலும் ஆதிக்க சாதியினரின் விவசாய நிலங்களில் வேலை செய்கின்றனர் அல்லது வேலையில்லாமல் உள்ளனர். பெரும்பாலான கிராமவாசிகள் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் (SIR) மற்றும் அதன் தாக்கம் பற்றி எதுவும் தெரியாமல் இருக்கின்றனர். மேலும் அதிகாரிகள் தங்கள் வீடுகளுக்கு வந்தார்களா என்பது கூட பலருக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் தங்கள் வாக்குரிமையை மிகவும் மதிக்கின்றனர். வாக்குரிமையை இழப்பது பேரழிவாக இருக்கும், எங்களை மேலும் வறுமையில் தள்ளிவிடும் என்று வேதனைப்படுகின்றனர்..

ஆனால் இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் ஆதார் அட்டை வாக்காளர் அடையாள அட்டை போன்ற ஆவணங்களை ஏற்றுக் கொள்ள மறுத்து மக்கள் மீண்டும் தங்களை வாக்காளராக பதிவு செய்ய இயலாத அளவு நிபந்தனைகளை விதித்தனர்... இதை எதிர்த்து

பல சமூக அமைப்புகள் எதிர் கட்சிகள் உச்ச நீதிமன்றத்தை நாடிய நிலையில் தேர்தல் ஆணையத்திற்கு கீழ்க்கண்ட வழிகாட்டுதல்களை வழங்கியது:

1)2025 வாக்காளர் பட்டியலில் பெயர்கள் இடம்பெற்றிருந்தும், வரைவுப் பட்டியலில் பெயர் இல்லாத சுமார் அறுபத்தைந்து லட்சம் வாக்காளர்களின் பட்டியலை ஒவ்வொரு மாவட்ட தேர்தல் அதிகாரியின் இணையதளத்திலும் தேர்தல் ஆணையம் வெளியிடும்.

2)இந்தத் தகவல்கள் மாவட்ட வாரியாகவும், வாக்குச் சாவடி வாரியாகவும் வரிசைப்படுத்தப்படும், மேலும் வாக்காளரின் EPIC எண்ணால் தேடக்கூடியதாக இருக்கும்.

3)ஒவ்வொரு வாக்காளருக்கும், சேர்க்கப்படாததற்கான காரணமும் வெளியிடப்படும்.

4)இந்த வெளியீடு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, பீகாரில் பரவலாகப் புழக்கத்தில் உள்ள உள்ளூர் மொழி செய்தித் தாள்களில் பட்டியல் கிடைக்கும் தன்மை விளம்பரப்படுத்தப்படும், மேலும் தொலைக்காட்சி மற்றும் வானொலி சேனல்களிலும் ஒளிபரப்பப்படும். மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அதிகாரப்பூர்வ சமூக ஊடகக் கணக்குகளைப் பராமரிக்கும் இடங்களில், பொது அறிவிப்பும் அங்கு காட்சிப்படுத்தப்படும்.

5) வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களின் வாக்குச்சாவடி வாரியான பட்டியல், அவர்கள் சேர்க்கப்படாததற்கான காரணங்களுடன், சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகம் அல்லது பஞ்சாயத்து அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையில், பொதுமக்கள் முறையாக அணுகும் வகையில், அந்தந்த வட்டார வளர்ச்சி அதிகாரியால் காட்சிப்படுத்தப்படும்.

6)பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க கோரிக்கையை சமர்ப்பிக்கலாம் என்றும், அத்தகைய கோரிக்கைகள் விண்ணப்பதாரரின் ஆதார் அட்டையின் நகலுடன் இணைக்கப்பட வேண்டும் என்றும் பொது அறிவிப்பில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படும்.

7)பீகார் தலைமைத் தேர்தல் அதிகாரி, மாவட்ட வாரியாகப் பட்டியலிடப்பட்ட வாக்காளர்களின் மென் நகலை தலைமை நிர்வாக அதிகாரியின் இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்ற தீர்ப்பின் மூலம் பிகார் மாநில தேர்தலில் தேர்தல் ஆணையமும் ஒன்றிய அரசும் இணைந்து நடத்த இருந்த கூட்டுச்சதி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணைய வரலாற்றில் இவ்வளவு கடினமாக உச்சநீதி மன்றத்தால் கண்டனத்திற்கு உள்ளானதில்லை. En masse Inclusion or En masse Exclusion? என்று தேர்தல் ஆணையத்தை நோக்கி, கடினமான கேள்விகளை கேட்டதன் மூலம் தேர்தல் ஆணையம் அது தோற்றுவிக்கப்பட்ட நல்ல நோக்கத் திற்கு நேரெதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது, பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர்களுக்கு வாக்குரிமையைப் பறிக்கும் செயலில் இறங்கி இருப்பது குறிப்பாக பாஜக விற்கு எதிராக வாக்களிக்க கூடியவர்களாக கருதப்படுகின்ற சிறுபான்மை மற்றும் பட்டியலின அடித்தட்டு மக்களின் வாக்குரிமையை பறித்திருப்பதும் அவர்கள் தங்களை மீண்டும் வாக்காளராக பதிவு செய்ய விடாமல் அவர்கள் தங்கள் கைகளில் வைத்திருக்கும் அரசு வழங்கிய ஆதார் அட்டை மற்றும் தேர்தல் ஆணையமே வழங்கிய வாக்காளர் அடையாள அட்டையை செல்லாது என்று அறிவித்து நிரந்தரமாக அவர்களை நீக்கி வைக்க முயற்சித்தது அவர்களின் வாக்குரிமையை திருடிக் கொண்டதாகத்தானே பொருள்படும்.

இந்த இடத்தில் எல்லாருடைய மனதிலும் யதார்த்தமாக ஒரு கேள்வி எழும்.. ஒருவேளை வாக்குகளை திருடுவது தேர்தல் ஆணையம் என்று வைத்துக் கொண்டாலும் இதிலே ஒன்றிய பாஜக விற்கு என்ன சம்பந்தம் என்பது தான். இதை புரியும்படி சொல்வதானால் ஒரு திருடன் நகையை திருடுகிறான் அதைக் கொண்டு போய் ஒரு சேட்டு கடையில் கொடுத்து பணம் பெறுகிறான். மீண்டும் திருடுகிறான் அதே சேட்டு கடையில் கொடுக்கிறான் பணம் பெறுகிறான்..ஒரு முறையல்ல பலமுறை... திருடன் மாட்டிக் கொள்கிறான்...

விசாரணையில் சேட்டு கடையில் பணம் பெற்ற கதை தெரிய வருகிறது...அதிலும் தங்கத்திற்கு ஈடான பணமில்லை...குறைந்த பணமே பெற்றிருக்கிறான்...அதாவது கடைக்கார சேட்டும் பயன் அடைந்திருக்கிறான்...அப்போது மக்கள் .. டேய் கூட்டுக் களவாணிகளா? உங்களை விடக் கூடாது, அடிச்சே துரத்தணும் என்று தானே சொல்வார்கள்...மேலே சொன்னவற்றை கூட்டிக் கழித்து பாருங்கள்... நமது முதலமைச்சர் இவர்களை ஏன் கூட்டுக் களவாணிகள் என்று சொல்கிறார் என்பது புரியும்...

---

ச.அரவிந்த் ரமேஷ் தலைமையில்

## கழக வழக்கறிஞர் விக்னேஷ் மாசிலாமணி திருமண வரவேற்பு விழா!

### அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன் மற்றும் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, ப.தாயகம் கவி வாழ்த்துரை!

சென்னை, ஆக.30-

கழக வழக்கறிஞர் விக்னேஷ் மாசிலாமணி திருமண வரவேற்பு விழா இன்று (30.08.2025 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு நங்கநல்லூர் எம்.ஜி.ஆர். சாலையில் உள்ள ஹரிஹரன் ஹாலில் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் தலைமையில் நடைபெறுகிறது.



இந்நிகழ்வில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன், ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, ப.தாயகம்கவி, என்.ஆர்.இளங்கோ, பி.வில்சன், இரா.கிரிராஜன்,

சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெற்றிஅழகன், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், ஜெ.திவாகர், சர்மிளாதேவி திவாகர், எம்.கே.ஜெய், ஷெர்லி ஜெய், ம.ஆறுமுகம் கோ.வி.லெனின், எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வ நாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வி.எ. மதியழகன், வீ.கவி கணேசன், சாய் லக்ஷ்மிகாந்த், சாய் ஜெய்காந்த், ச.மனுராஜ், கன்னிகை ஸ்டாலின், பரிதி இளம்சுருதி, ரத்னா லோகேஸ்வரன், தமிழ் கா.அமுதரசன், எஸ்.எஸ். ராஜு, என்.சந்திரன், ப.குணாளன், எம்.கிருஷ்ணமூர்த்தி, கூ.பி.ஜெயின், பெரியமேடு சுதாகர், மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட கழக முண்ணியினர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

வழக்கறிஞர் அருண் குமார், ஐடிவிங் கிஸ்டாலின் மொழி, வழக்கறிஞர் மெ.கவிகண்ணன், சுலைமான் சையத், இ.கார்த்திக், கே.கே.(எ)சண்முகம் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.



விழுப்புரம் மேனாள் நகர்மன்றத் தலைவர் – மாவட்டக் கழக பொருளாளர் விழுப்புரம் இரா.ஜனகராஜின் தந்தை மறைவிற்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் ம.ஜெயச்சந்திரன் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.